# சுற்றறிக்கை

- மேல்நிலை இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டு மாணவர்களுக்கு அகமதிப்பீட்டு மதிப்பெண்களை www.dge.tn.gov.in இணையதளம் மூலம் 11.02.2025 அன்றைக்குள் முடித்திடவும் , அகமதிப்பீட்டு மதிப்பெண் பட்டியலை வேலூர்,கல்புதூர்,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்கும் பொழுது Manual copy மற்றும் Online copy ஆகிய இரண்டையும் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- பத்தாம் வகுப்பு/மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு முதன்மை விடைத்தாட்களை பெயர்பட்டியலோடு (NOMINAL ROLL) சரிபார்த்து உரிய இணைப்புகளுடன் உள்ளதை சரிப்பார்த்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- பத்தாம் வகுப்பு/மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பெயர் பட்டியலில் இருந்து (Nominal Roll ) நீக்கப்பட்ட மாணவர்களின் (Deleted candidate) முதன்மை விடைத்தாட்களுடன்
  உள்ள முகப்புத் தாட்களை பட்டியலிட்டு 12.02.2025 அன்று மாலைக்குள் வேலூர், கல்புதூர்,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- மேல்நிலை இரண்டாமாண்டு செய்முறைத் தேர்வுகள் முடித்தவுன் உரிய ஆவணங்களுடன் செய்முறைத் தேர்விற்கான மதிப்பெண் பட்டியலை காட்பாடி,அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஒப்படைத்து மேல்நிலை முதலாமாண்டிற்கான செய்முறைத் தேர்வுகள் மந்தணக்கட்டுக்களை அதே பள்ளியில் உரிய முகப்புக் கடிதத்துடன் பெற்று செல்ல தெரிவிக்கப்படுகிறது.

  (குறிப்பு: அகத்தேர்வாளர் / புறத்தேர்வாளர் / அலுவலக பணியாளர்கள் வருகைப்பட்டியல் மற்றும் உழைப்பூதிய பட்டியலை வேலூர்,கல்புதூர்,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்அலுவலகத்தில் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.)
- மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு செய்முறைத் தேர்விற்கு தேவையான தாட்கள் (செய்முறைத் தேர்வு விடைத்தாட்கள் ) தேவைப்படின் வேலூர், கல்புதூர்,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் உரிய முகப்புக் கடிதத்துடன் பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

  (குறிப்பு : செய்முறைத் தேர்வு விடைத்தாட்கள் அரசு /அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு மட்டும் வழங்கப்படும் )

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
- அனைத்து வகை உயர்/மேல்நிலைப்பள்ளி தலையமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதலவர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் )தொடர் நடவடிக்கையின் பொருட்டு
  அனுப்பப்படுகிறது.
- வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.